Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜயவருஷ தைமீ கசு உ வெள்ளிக்கிழமை (28 JAN. 1955) [இல-சங]

முன்னிதழ்த் தொடர்ச்சி — [14]

## திருமுருகாற்றுப்படை — இலக்கிய நயம்

## எதிர்ப்பட்டவனை ஆற்றுப்படுத்தும் ஒப்புயர்வற்ற எழில்

———0———

(முற்றொடர்)

"இழுமென விழிதரு மருவிப் பழமுதிர் சோலை மலைகிழவோன்" பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத் திறநலங் காட்டித் தோன்றுவான். உனது வரவை அறிவேன்! அஞ்சாதே என்று அன்பு கலந்த சொற்களைக் கூறி உலகத்தில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி நீ விளங்குமாறு பெரும் பரிசிலை உனக்கு நல்குவன்.

x x x

சிறுதினை மலரொடு விரைஇ
மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட
நிறீஇ
ஊருர் கொண்ட சீர்கெழு
விழவினும்
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
..............கந்துடை நிலையினும்
... ... ... ... ... ... ...குறமகள்
... ... ... ... ... ... ... ... ...
முருகாற்றுப் படுத்த உருகெழு
வியனக(ர்)
... ... ... ... ... ... ... ... ...
வேண்டுநர் வேண்டியாங்
கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு
மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாக
காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந்
தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற
வணங்கி
... ... ... ... ... ... ... ...
போர்மிகு பொருந குரிசி
லெனப்பல
யானறி யளவையி னேத்தி
யானாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க்
கருமையி
னின்னடி யுள்ளி வந்தன
னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயென
... ... ... ... ... ... ... குறியவர்
... ... ... ... ... ... ... ... ...
வந்தோன் பெருமநின் வண்புகழ்
நயந்தென
... ... ... ... ... ... ... ... ...
தெய்வஞ் சான்ற திறல்விளங்
குருவின்
வான்றோய் நிவப்பிற் றானுவந்
தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப்
பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்
திறநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின்
வரவென
வன்புடை நன்மொழி யளைஇ......
... ... ... ... ... ... ... ...
பெறலரும் பரிசி னல்குமதி......
... ... ... ... ... ... ... ... ...
இழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

x x x

இப்பகுதியிலே தான் பாட்டு முதிர்ந்து உச்ச நிலையை அடைகிறது எனலாம். "முந்துநீ கண்டுழி" என்றது முதல் பாட்டு மிகுந்த வேகத்துடன் சென்று உச்ச நிலையை வான்றோய் நிவப்பிற் றானுவந்தெய்தி என்ற அடிமுதல் நல்குமதி என்றது வரையுள்ள பகுதியில் அடைகிறது. முந்துநீ கண்டுழி என்றது முதல் புரையுநரில்லாப் புலமையோயென என்றது வரை முருகனை வணங்கப்படவேண்டிய முறைமையை எதிர்ப்பட்டவனுக்கு உணர்த்தினர் புலவர். முருகனை அடைந்து அவனருளைப் பெறுதற்குரிய வழிவகைகளைக் கூறுகின்றமையால் இப்பகுதிதான் உண்மையான ஆற்றுப்படையாகத் திகழ்கின்றது.

திரு. சி. முருகவேள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## சிங்களசாதி உற்பத்தி வாக்குவாதம்

அனுராதபுரம் நகரமண்டபத்தில் ஐக்கியமுன்னேற்ற உதவிக் காரியாதிகாரி ஸ்ரீ டீ. டபிள்யு விஜயசேகர தலைமையில் "சிங்கள சாதியின் சரித்திரம்" என்னும் பொருள்பற்றி பண்டித பயின்துகுலமெ ஸ்ரீ சுமன திரோ அவர்கள் ஒரு சொற்பொழிவாற்றினர். அத்தொடர்பில் சிங்கள சாதியின் சரித்திரம் விஜயாவின் வருகைக்குப் பின்பா தொடங்கியது? என்னும் கேள்வி கேட்கப்பட்டது. விஜயவின் வருகைக்கு முன்னரும் இலங்கையில் மக்கள் வாழ்ந்தனரேனினும் விஜயவின் வருகையிலிருந்தே சிங்கள சாதியின் சரித்திரம் தொடங்குகின்றதென்று பிரசாரகர் மறுமொழி சொன்னர்.

கிராமமுன்னேற்ற உத்தியோகஸ்தர் ஸ்ரீ எம் பீ. கொட்டுவெல அதை ஆட்சேபித்தார். விஜயா வருவதற்கு 1200 ஆண்டுகளுக்கு முன்பு "ஹெலாஸ்" என்னும் மக்கள் இலங்கையில் வசித்தனரென்றும், அந்த நாட்களில் இராவணன் ஓர் பேரரசனுயிருந்தானென்றும் கூறி விஜயாவே முதன்முதல் முறையினமாக இலங்கைக்குள் நுழைந்தான் என்றும் ஸ்ரீ கொட்டுவல கூறினர்.

விஜயாவருவதற்கு முன்னரே மஹியங்கனவுக்கு புத்தா சென்ருரென்றும புத்த தருமத்தை விளங்கக் கூடிய மக்கள் அக்காலத்திலிருந்தமையால் விஜயா வருவதற்கு முன் பெரும் முன்னேற்றமடைந்த மக்கள் இலங்கையில் வசித்தார்களென்றும் அனுராதபுரம் கச்சேரி முதலியார் ஸ்ரீ ஸ்ரீமேவன் கொடகே கூறினர்.

## ஈருடல் ஓர் உயிர் வாழ்வு

———0———

## சைவ நூல் அறிவே தருவது

உலகம் ஆண் பெண் என்னும் இருபாலாராலும் ஆக்கப்பட்டிருக்கிறது. அன்பே சிவம். அருளே சக்தி. அன்பு வேறு சிவம் வேறு அல்ல. அருள்வேறு சக்திவேறு அல்ல. ஆகவே சிவமும் சக்தியும் ஒன்றுபட்டதே உலகு வேறுவிதமாகச் சொல்லுகில் அன்பும் அருளும் ஒன்றுபட்டே இந்த உலகம் காட்சி அளிக்கிறது.

எம்பெருமான் எம்பெருமாட்டியாகிய சக்தியை இடது பாகத்தில் கொண்டார் என்று உலகோர் எண்ணி வருவது சாலப் பொருந்தும். "மாதொரு பாகனர்" என்று வரும் திருவாக்காலுமுணர்க.

எம்பெருமானை ஓர் மானுடருமாகப் பாவித்து அதில் ஒரு பாதி உடல் ஆணுகவும் மறு பாதி பெண்ணுகவும் நாம் கருதி வணங்கிவருகிறோம். இதன் ஞானக் கருத்தென்னவென்ருல் சிவமும் சக்தியும் சேர்ந்தே உலகத்தை நடத்தி வருகிறதென்றதே. உலக இயல்பின் வழியே கடவுளும் காட்சி அளிக்கிறார் என்று நாம் யூகிக்கிறோம். எங்கள் உளவம் வேறு விதம் எவ்வாறு

.... .... .... .... .... .... ....

எழுதியவர்

திரு. வ. நடராசா

.... .... .... .... .... .... ....

கொள்ளும்? தன் உடல் போலவே கடவுளும் ஓர் உடலை வைத்திருக்கிறார் என்றுஉயிர்கள் எண்ணுகிறதியல்பே.

"எல்லாவு லகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லாவுடலு மிறைவன் ஆலயமே"

ஆகவே மக்கள் எம்பெருமானை ஆறறிவும் நிறைந்த நெறிபிறழாத ஓர் மானுடனுகப் பாவனைசெய்து தொழுவதில் இழுக்கில்லை!

"எங்கேங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கிருப்பது நீயன்றோ பராபரமே"

என்ற திருவாக்காலும் பரம்பொருளை நாம் மனிதனுகப் பாவனை பண்ணி வணங்குவது சாலப் பொருந்துமென்க. இனிப் பிறமதத்தோர் போன்று எங்கும் வியாபித்திருக்கும் ஒரு பொருளை மனம் வாக்குக்கு எட்டாத ஒருநிலையில் வைத்து வணங்குவதாலேதேனும் பயனுண்டா? இந்த மண்டலத்தைவிட வேறோர் மண்டலமுண்டென்றும் அங்கேயே எம்பெருமான் வீற்றிருக்கிறாரென்றும் எண்ணுவது பேதமை "பரலோகராச்சியம் உனதுள்ளத்தே வருவதாக" என்று யேசு சொன்ன திருவாக்கையும் நாம்மறந்துவிடுவதா? மனம் வாக்குக்கு எட்டாத நிலையில் பரம்பொருளை வைத்து வணங்குவது சாத்தியமல்ல! அந்தநிலையில் அப்பொருள் வணங்கப்படமாட்டாது.

உயிர்கள் அனைத்தும் அவனே. உடல்கள் அனைத்தும் அவன் திருநடனஞ் செய்யும் சந்நிதிகளே.

அங்கிங்கெனுதபடி நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் உடல்கள் அனைத்தையும் கோயிலாகக் கொண்டிருக்கிறார். அந்த உடல்கள் தாங்கும் உயிர்கள் அனைத்தும் அந்தப் பரம்பொருளே. அவ

[தொடர்ச்சி 6ம் பக்கம்]

## நீதிபதி ஸ்ரீ நாகலிங்கமவர்களின் பதவி நீக்கம்

உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ சி. நாகலிங்கம் அவர்கள் தமது பதவியிலிருந்து உடனே நீங்குவதாக அரசாங்கத்துக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டாராம். ஐப்பசி மாதம் நீங்குவதாக இருந்த நீதிபதி அவர்கள் அதற்கு முன்னரே நீங்கத் தீர்மானித்துவிட்டார்.

ஸ்ரீ எச். எச் பஸ்நாயக அவர்கள் பிரதம நீதிபதியாய் நியமிக்கப்பெற்று இப்பொழுது இடைக்காலப் பிரதம நீதிபதியாய்க் கடமையாற்றுவாரென்றும் அறிய வருகின்றது.

ஸ்ரீ நாகலிங்கம் அவர்களின் தொடர்பில் அரசாங்கம் நீதியான முறையில் இடைக்காலப் பிரதம நீதிபதி நியமனத்தைச் செய்யவில்லை என்று அவர் கருதுவதே திடீரென அவர் பதவியிலிருந்து நீங்குதற்குக் காரணமாம்! இதற்கு முன் இடைக்காலப் பிரதம நீதிபதியாகவும் இடைக்காலத் தலைமைத் தேசாதிபதியாகவுமே கடமையாற்றியுள்ளார் என்பது சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது.

———

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

## இந்துசாதனம்

யாழ். ஜய ஞு தை மீ
கரு ௳ வெள்ளிக்கிழமை

## தாய் இங்கு …… தம்பி கும்பகோணத்தில் ?

உலக உலாப்போய் உருசை கண்ட இலங்கை முதல் அமைச்சர் ஒரு இடத்தில் இருந்து அலுவல் பார்க்க முடியாத நிலையில் அங்கோடி இங்கோடி வருவது இந்நாட்டிற்கு இன்னலை விளைவிக்கிறதென்பது இப்பொழுது வெளியாகிவிட்டது. புறநாட்டு நட்பு வேண்டும். உலக அமைச்சருடன் ஒருங்கு சேர்ந்து கலந்துரையாடல் வேண்டும், ஈழத்துக்கு மதிப்புத் தேடுதல் வேண்டுமென்றால் உள்நாட்டு அலுவல்கள் சீர்குலைந்து பேரிடரை வருவிக்கும் அளவிற் புறக்கணிக்கப்படல்வேண்டுமா?

தாய் மொழியிற் கல்வி பயிற்றும்திட்டம் ஒன்றைக் கொணர்வதற்கு அத்துறை அமைச்சர் முயன்றபொழுது அமைச்சவையில் ஒற்றுமை காணப்படாது முதல் அமைச்சர் வருகை எதிர் பார்க்கப்பட்டது. அன்னார் வந்தும் அத்திட்டத்தைப் பன்னாட் படித்து ஆராய்ந்து ஒருமுடிவுசெய்யும் முறையில் ஆறுதலாக இருந்தாரா? வேற்றுமையை விலக்குதற்கு வழி கண்டாரேயன்றி நாட்டின் நன்மை கருதி எக்காலமும் எவ்வகையிலும் பயன்படும்வண்ணம் ஒரு திட்டத்தை வகுத்தாரில்லை.

இவ்வாறே உள் நாட்டிலே ஒற்றுமைக் குறைவும் அழுக்காறு அவா முதலிய தீய குணங்களின் வசத்தராகிப் பரோபகார வேடந் தாங்கி நிற்போரின் சூதும்நாளுக்குநாள் பெருகி வருவதை யார் அறியார்?

அண்மையிலே நடந்த உயர்நீதிமன்ற உத்தியோக நியமனத்தையும் அதிலிருந்தெழுந்த மக்கள் உணர்ச்சியையும் உற்றுநோக்கும்பொழுது முதல் அமைச்சர் உள்நாட்டு அலுவல்களில் முழுமனதைச்செலுத்தி முரண்பாடுகள் எழாதவண்ணம் தடுத்து ஈழத்தின் மதிப்பை இங்கிருந்தே உண்டுபண்ணுதல் வேண்டும் என்று புலப்படுகின்றது.

விடுதலை பெற்றுத் தன்னரசு நடத்தி ஆண்டுகள் பல கழிவதற்கு முன் மக்கள் வேற்றுமைப்பட்டு சாதி மதம் மொழி என்ற முரண்பாடுகளாற்றாக்குண்டு பதவிக்கும் பட்டத்துக்குமாக நெறி முறை தவறி நிற்பது நாட்டிற்குப் பெருங்கேட்டை விளைவிப்பதொன்றாகும்.

தாயின் நிலையைச் சற்றேனும் உணராது தம்பி கும்பகோணத்தில் அன்னதானம் வழங்குந் தன்மையில முதல் அமைச்சர் பூப்பிரதக்கிணத்தில் மற்றுக மனதைச் செலுத்துதல் நாட்டின் நன்மைக்கு மாறாக முடியும் என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

●

### புத்தி எங்கே போவது?

நீதிமன்றம் நாட்டின் நிறைவுக்கு ஒரு அணிகலன்; நெறியின் நிலையம்; அரசியல் ஆரவாரத்திற்கப் பாற்பட அமைந்துள்ளது. இருந்தும் உயர்நீதி மன்ற அதிபர் உத்தியோக நியமனத்திலே மின்னுது முழங்காது குரு வளியுடன அகாலமாரி பெய்ததும் அதனுற் கண்ணியமிக்க நீதிபதி ஒருவர் பதவியை விட்டு நீங்க எண்ணியதும் நாட்டின் வரலாற்றில் காரிருட் படலமாய்ப் படிந்து விட்டன. முதல் அமைச்சர் நாழிகை கழிந்தபின்னராவது புத்தியறிந்து விளைந்த விபரீதத்தை மாற்றி வைத்தார். என்றமட்டில் நாம் ஆறுதல் அடைகின்றோம். நீதிமன்றம் அரசியல் வாதிகளின் நோக்குக்குட்படாத பெருநிலையம் ஆகையால் நாம் இதைப்பற்றி எழுதுவதற்கு விரும்பவில்லை. நாட்டின் நன்மைக்காகவேனும் புத்திசித்தம அதிகாரிகளிடத்தில நன்கு அமைதல் வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

அரசியல் அலை:

# பாராளுமன்றத்தில் 'சுவபாஷா நாடக' அடுக்குப்பார்வை!

### கூத்துப் பார்ப்போர் உள்ளங் குளிர நடிக்குங் காட்சி

தாய்மொழியிற் கல்வி! பயிற்ற அரசினர் திட்டம் இட்டார்களே. அதுதானும் போதாதாம்? யார் கூற்று? அந்தச் சிங்கள மகாசபைத் தலைவர் திரு. பண்டாரநாயகவின் அட்டகாசம் என்று சொல்லவும் வேண்டுமா?

ஆங்கிலத்தில் அழகாய் ஆணித்தரமாகப் பேசக்கூடியவர் திரு. பண்டாரநாயக. பாராளுமன்றத்தில் நடக்கும் விவாதமோ முக்கியமானது. சிங்கள மொழி தெரியாதார் பலர் உள்ள மன்றம். இப்படியிருந்தும் இந்த அரசியல் வாதிக்குத் தாய்மொழியிற் பேசும் பிரேமை ஏற்பட்டுவிட்டது. இப்பெரியார் ஜேஜா குணவர்த்தன அவர்களின் வழக்கில் தமது சிங்களமொழி ஞானத்தைப் பற்றிச் சொல்லியது யாவரும் அறிந்ததே. எளரியில் நின்று பார்த்தார். கூத்துப்பார்ப்போர் தொலைக குதூகலத்தைவருவித்தது. அவர்களைத் தட்டி எழுப்பப் பேசுவதானல் 'சுவபாஷா'ச் சொற்பெருக்குதலே முறையென்று உணர்ந்தார் — சிங்களத்திற் பேசினர்.

முழுச்சிங்களமாயிருந்த இந்த விவாதத்திலே தமிழ் பேசும் அங்கத்தவர்கள் எப்படிக் கலந்து கொள்வது? ஒலிக்கலைகலப்புக்காக வைத்த விவாதம்போலிருக்கிறது.

சிறுபான்மையினருக்காகச் சிணுங்கும் திரு. கு. க நாயகவும் தாய் மொழியிற் பேசினர். பேச்சின் சாரத்தை ஆங்கிலத்திற் கொடுக்க மறுத்துவிட்டாராம்.

ஒருவரை ஒருவர் அறியமாட்டாத வகையில் ஒரு பெரும் விவாதத்தைப் பாராளுமன்றத்தில் நடத்துவதின் கருத்தென்னவோ?

### பிரதம நீதிபதியாகிறார் ஸ்ரீ நாகலிங்கம்

நீதிபதி ஸ்ரீ நாகலிங்கம் அவர்கள் இடைக்காலப் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பெற்று, தமது பதவி நீக்கப் பத்திரத்தை மீட்டுப் பெற்றுவிட்டாராம். அரசாங்க முறையினத்தால் முன்பு உண்டான பரபரப்பு ஒருவாறு அடங்குமென்று சிலர் கருதுகின்றனர். ஆனல் இத்தொடர்பில் எதிர்க்கட்சியினர் அறிவித்தல் கொடுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாதிக்கப்பட வேண்டுமென்பது அவர்கள் கருத்தாம்.

# அன்புணர்ச்சி ததும்பும் தொண்டர்கூட்டம்

### எதிர்கால மக்களுக்கு இன்பம் விளைக்கும் தீர்மானங்கள்

### ஆவடியில் இந்திய தேசியமகாநாட்டின் அலங்காரமான அறுபதாம் ஆண்டுவிழா

அலங்காரக் காட்சியமைந்த மகா மண்டபம். என்றுமில்லாத மக்கட் பெருக்கம். ஓங்கிப் பாந்த உணர்ச்சிவெள்ளம். இத்தகைய ஒப்பில்லா நிலைமையில் இந்திய தேசிய மகாநாடு சத்தியமூர்த்தி நகரில்கூடியது. உணர்ச்சி மிகுந்த மக்கட் பெருக்கத்தைப் பார்த்துப் பண்டிதநேரு அவர்களே பரவசராயினரென்றால் இந்திய தேசிய மகாநாட்டுநிகழ்ச்சிகளில் மக்கள் எவ்வளவு ஆர்வமுடையராய்க் கூடினரென்பது சொல்லவும் வேண்டுமகொல?

காந்தியடிகளின்வழி நின்று பெருந்தியாகியாய்த் தொண்டாற்றிய ஸ்ரீ தேபார் அவர்கள அணிசரு அணிசெய்வாராய்த் தலைமை தாங்கிப் பேசும் போது சிற்றாருகத் தொடங்கிய இந்திய தேசிய மகாநாடு பேராருகப் பெருகி, சங்கை பிரமபுத்திரா போன்ற புனித நதியாகப் பாயத தொடங்கியது. பல்லாண்டுகளாகச் செய்த பாவங்களை நாம் அதில் கழுகினேம். அதன் பயனாய் எமிடையே ஐக்கியம், புததுயிர், புத்துணர்ச்சி என்பன தோன்றி வளர்ந்தன. அதனுல் அது உலகிலே ஒப்புயர்வற்ற ஒரு பெரும சத்தியாக ஓங்கி மிளிர்கின்றது என்று உணர்ச்சி ததும்பச் சொற்பெருக்காற்றினர்.

அவர் தொடர்ந்து பேசும் போது உலகம் என்பது பல நாடுகள் சேர்ந்த ஒரு குடும்பம். இக் குடும்பத்தின் எப்பகுதியிலேயெனினும் ஒரு முரண்பாடுநிகழுமானல் இதன் உறுப்பினராகிய நாம் சுமமாயிருக்கமுடியாது. சமாதானம் சிதறுமானல் மக்கள் முன்னேற்றம் மாய்ந்துபோகும். ஆகையினலே சமாதானம் நிலவச் செய்தற்கு உதவுதல் தவிர்க்கமுடியாத எம கடனாகின்றது, காந்தியடிகளில்லாவிட்டாலும் அவருடைய சக்தி எம் முடனிருக்கின்றதுஎன்று உலகசமாதானத்துக் குழைக்க வேண்டிய கடமையை வற்புறுத்தினர்.

நாட்டை எதிர்த்து நிற்கும் இடைஞ்சல்கள், நாட்டின் முன்னேற்றத்துக்கு உருவாக்கப்பெற்றிருக்கும் திட்டங்கள் பொருளாதாரம், சமூக நீதியும் ஒற்றுமையும், மக்களுக்குச் சமசந்தர்ப்பம், சாதிபேதங்கள் வகுப்பு வாதங்கள என்பனவாய் நாட்டின் கருத்தை ஈர்த்து நிற்கும் பல பொருள்களில தமது உள்ளக்கிடக்கையை எடுத்துக் கூறினர்.

மக்கள் பாராட்டும் முறையில பல சிறந்த தீர்மானங்களைச் செய்து எதிர்காலம் மக்களின் இன்பத்துக் கேதுவாகும் என்னும நிடநம்பிக்கையோடு அன்புணர்ச்சியுடன் இன்பம் பெருக மகாநாடு நிறைவெய்தியது.

# வாழ்க்கை வானில்

—வளர்மதி

### பொட்டுப்போன போக்கில்……

சந்தனப் பொட்டுக்கு ஒரு தனி மகிமை, குங்குமப்பொட்டுக்கு ஒரு குலமதிப்பு இருந்த காலம போய்விட இப்பொழுது எல்லாருக்கும் செந்தளிப்பையும்சிறப்பலங்காரத்தையும் கொடுக்கும் பொது வகையில மதபேதமின்றி இவ்விரு சாதனங்களும் கையாளப்பட்டு வருகின்றன வென்று 'வளர் மதி ஒரு ஆராய்ச்சி செய்தது. யானைவரும பின்னே மணி ஓசை வரும முன்னே. என்ற விதமாக புற மதத்தவர்கள பொட்டையும பிறையையும் போட்டுப் பழகிப் பின் தம முன்னேரின் மதத்துக்கே திரும்பவுஞ் சென்று விடுதற்கான அறிகுறியிதுவாகுமா என்ற ஆராய்ச்சி முடிபொன்று தோன்றியது. இந்நாட்டு மக்கள் போர்த்துக்கேயர் வரமுன்பு இந்துக்கள். அன்னியர் உடை நடை பாவனையில் மயங்கி அவர மதம் புகுந்தனர். அநேகரும போயினர். அவருடன் வந்த மொழியும் பேசிக்கொண்டிருக்கின்றது. அவர்தம் உடை நடை பாவனைகளும் போகும. எனவே பழைய உதயமாகும். யாவரும் இந்துக்களாவர் என்பது வளர்மதிக்கு மட்டுமன்று தளர்மதிக்குமே தோன்ற வேண்டியதொன்று.

●

### பொங்கல் போகும் புதுமை………!

தைப்பொங்கல் இந்துக்களின் விழாவில் ஒன்று. இப்பறகையோடியைந்தது இறைவழிபாடு என்றபடி இயற்கையில் இறைவனைக் காணும விழா. பல்லாயிரம் ஆண்டுகள் தைத்திங்கள் தோறும் உத்தயாளிலே இந்துமத முந்துநூல முறைப்படி வந்த பொங்கல். எங்கிருந்தோ இங்கு வந்த அந்நியருக்கும் அவர் கொணர்ந்த மதத்துக்கும் அந்நியமான பொங்கல். பொதுவுடைமைப் பொங்கலாய் மாறினல் என்ன? பொட்டுப் போன வழி போனல் என்ன? என்

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

## சுதுமலை சிவன்கோவில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம்

நிகழும் தை மாசம் 20ந் தேதி (2-2-55) புதன்கிழமை உதயத்தில் உரோகிணி நட்சத்திரமும் கும்பலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் வேத சிவாகம முறைப்படி மேற்படி கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெறுமென அறியவருகின்றது.

## தமிழ் நோயாளர் கதி

கொழும்பு அரசாங்க வைத்தியசாலையின் விசாரணைக் கந்தோரில் கடமையாற்றிய தமிழ் உத்தியோகஸ்தர் வேறு பகுதிக்கு மாறியபடியால் இப்பொழுது ஆங்கில சிங்களமொழி அறிவில்லாத தமிழ் நோயாளர்கள் தங்கள் நிலைமையை விளக்க முடியாது வருந்துகிறார்களென்று அறிய வருகின்றது.

## இந்திய தேசிய மாநாடு

### காரிய ஆலோசனைச் சபைத் தீர்மானங்கள்

இந்திய தேசிய மகாநாட்டுக் காரியாலோசனைச் சபையில், அன்னிய நாட்டுக் கொள்கை, பொருளாதாரத்திட்டம் தேச ஒற்றுமை என்பன பற்றிய பிரேரணைகள் முறையே ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார், பண்டித நேரு, பண்டித பந்த் ஆகியோரால் பிரேரிக்கப் பெற்று ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பெற்றன.

# யாருக்கு நடவாது?

## நீதிபதி ஸ்ரீ நாகலிங்கம் அவர்களுக்கு நடந்தது

பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலே அனுபவித்த உரிமைகளே இச்சுதந்திர காலத்தில் தமிழ் மக்களுக்கு இல்லாமற் போய்விட்டன. இந்நிலைமைக்கு நாமே காரணர். சிங்கள மக்களையோ வேறு யாரையோ குறைகூறுவதாற் பயனில்லை.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்றபடி எங்களுக்குள் ஒற்றுமையுண்டாகுமேயானல் எங்கள் பிறப்புரிமைகளை நாம் இலகுவாய் எய்தலாம். போற்றுதற்குரிய எங்கள் பண்டைப் பண்பாட்டிற்கேற்ற வாழ்க்கையை வாழலாம். அவ்வாறு வாழ்ந்து ஏனையோர்க்கும் வழிகாட்டலாம். வேண்டிய ஒற்றுமையை உண்டாக்குதற்கு ஒரு சமரசச் சபை அமைக்கவேண்டும். அத்துறையில் உழைத்தற்குப் பெருமக்களே முன்வாருங்கள் என்று முன்னொரு முறை ஒரு வேண்டுதல் விடுத்திருந்தேன். வேறு அன்பர்களும் அதற்குச் சாதகமாயெழுதினர்கள். சில பெருமக்களின உற்சாக மொழிகளும வந்தன. ஆனல் உற்சாகம் தருந்த அளவுக்கு வெளியில தோன்றவில்லை. புதுச்சபை அமைப்பதில் சிலருக்கு அச்சமும உண்டாயிற்று. அத்தகையநிலைமையில் பழைய யாழ்ப்பாணச் சபைக்குப் புத்துயிர் கொடுத்துக் காலத்துக்கேற்றவாறு அமைத்தாலோ என்று சிலர் கருதினர். அக்கருத்தின்வழியே சென்ற பொழுது யாழ்ப்பாணச் சபையின் கடைசிக் காரியதரிசியாயிருந்த திரு. வீ. எஸ். கார்த்திகேசு அவர்கள், அரசியலமைப்பில தமிழ் மொழியைப்பற்றி மாற்றம் செய்வதாக சேர். ஜோன். கொத்தலாவல செய்த உறுதிமொழியின் விளைவைப் பார்ப்போம். அதன்பின் வேண்டுமானல் வேண்டியது செய்வோம் என்றார்.

இவை இவ்வாறிருக்க, இலங்கைத் தமிழ் மக்களுக்கு வருத்தமுண்டாக்கும் நிகழ்ச்சிகளும் நடந்துகொண்டேவருகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சமாதானங் கூறப்படுவது சர்வசாதாரணமாய் விட்டது. இப்பொழுது உயர் நீதிமன்ற நீதிபதியாய் பிரதம நீதிபதியாய், தலைமைத தேசாதிபதியாய்த் திறம்படக் கடமையாற்றிய பெரியார் ஸ்ரீ நாகலிங்கம் அவர்களுக்கு நடந்ததென்ன? இத்தகைய ஒருவருக்கு இப்படி நடக்குமேயானல் வேறு யாருககு என்ன நடக்க முடியாது? என்ன சமாதானம சொல்ல முடியாது?

தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இந்நிலைமையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும. அகங்கார இருளிலிருந்து வெளிவந்து தாயமனத்துடன் தமிழ் மக்களின் ஒற்றுமைக் குழைக்க வேண்டும். இதுவே இப்பொழுது இன்றியமையாதது. பூனைக்கு மணிகட்டுவது யார் 'என்று பார்த்திருக்க வேண்டியதில்லை. பெரு மக்கள் மறைந்து நில்லாது தங்கள் கருத்துக்களை வெளியாக்குவார்களேயானல் வழி தானே திறக்கும்.

— ச. தியாகராசா —

# இந்தியாவிலும் இசை நாட்டிய ஈழத்துச் சான்றோர்

[ "புகலியர்கோன்" புகல்வது ]

## 15. சிவசம்புப்புலவர் (II)

சிவசம்புப்புலவரிடத்துக் கல்விகற்றோர் பலர். அவர்களுட் சிறந்த புலவர்களாகவும், வித்துவான்களாகவும், பண்டிதர்களாகவும் விளங்கியவர்கள், புலோலியில் வாழ்ந்த சகோதரர்களாகிய வ. சுப்பிரமணிய பிள்ளை, திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் ஆரிய திராவிட பண்டிதராகக் கடமையாற்றிய கணபதிப்பிள்ளை, நன்னூற்காண்டிகையுரை விளக்கம், பாரதம் சபாபருவ உரை என்னுமிவற்றையெழுதிய குமாரசுவாமிப் புலவர், இம்மூவருடைய தங்கையாராகிய யோகினி பார்ப்பதியம்மையார் என்னும் நால்வரும், வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வைத்தியலிங்கபிள்ளை, மேற்படியூர் த. அருணாசலம்பிள்ளை, புலோலி அ. வேன்மயில்வாகனப்புலவர், ம. முத்துக்குமாரசாமிக் குருக்கள், கரணவாய் சு. கனகசபாபதிக்குருக்கள், தி. ஞானப்பிரகாசதேசிகர், சகோதரர்களாகிய கை. திருஞானசம்பந்ததேசிகர், நமசிவாயதேசிகர், அல்வாய் மொத்தாரிசு, இ. ஆறுமுகம்பிள்ளை, மந்துவில் வைத்தியலிங்க உபாத்தியாயர் முதலியோராவர். இப்புலவருடைய மாணாக்கருட் பலர் பஞ்ச இலக்கணப் பயிற்சி பெரிதுமுடையவர்களாகக் காணப்பட்டார்கள், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையவர்கள் தாம் பாடிய ஈழமண்டல சதகச் செய்யுட்களை இப்புலவரிடங் காட்டி மேற்பார்வை செய்வித்ததை நாம் நேரிலறிவோம்.

இப்பெரும்புலவர், தமிழ்மொழியபிமானியும் பிரபல வள்ளலுமாக விளங்கிய பாஸ்கர சேதுபதி மீது கல்லாடசாரக் கலித்துறையும், நான்மணிமாலையும், வேறுபல கவிகளும் பாடி அவராற் பெரிதும் சன்மானிக்கப் பெற்றார். மேலும் மதுரையில் நான்காந் தமிழ்ச் சங்கத்தை நிறுவி நடாத்திய பாண்டித்துரைத் தேவர்மீது நான்மணிமாலை யெனனும் பிரபந்தத்தைப் பாடி அவராற் பாராட்டிச் சன்மானிக்கப்பெற்றார். ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களைத் தமது அபிமான குருவாகக்கொண்டு பெரிதும் பாராட்டி வந்தனர். நாவலரவர்கள் சிவபதமடைந்த போது, சிவசம்புப் புலவர் தாங்கொணுத் துயர முற்றுச் சில அருங்கவிகளைப் பாடியுள்ளார். அவைகளுள் ஒன்றை இங்கே தருகின்றேம்.

"ஆரூரனில்லை புகலியர்கோனில்லை யப்பனில்லை
சீருரு மாணிக்க வாசகனில்லை திசையளந்த
பேருருமாறு முகநாவலனில்லை பின்னிங்கியார்
சீருறும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்குநீர்மையரே"

ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் மாத்திரமல்லாமல், அக்காலத்தில் விளங்கிய சிறந்த தமிழறிஞர்களாகிய சி. வை. தாமோதரம்பிள்ளை முதலானோருஞ் சிவசம்புப் புலவரைப் பாராட்டியுள்ளனர். இப்புலவருக்கு இணை கூறுகில் இவர் காலத்துத் தென்னிந்தியாவில் விளங்கிய, திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரப் பிள்ளையையே கூறலாம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள், 30—1—55 — 6—2—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்த வாரம் உம்முடைய சகோதர சகோதரிகள் உமக்கு அதிகம் உதவி செய்வார்கள். நண்பர் மூலம் இன்பத்துக்கு மிடமுண்டு. ஆனல் குடும்ப காரியங்கள் அதிகம் நலமாயிருக்கமாட்டா.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் முழுதும் குடும்ப சமாதானமிருக்கமாட்டாது. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு ஆனல் அவர்களால் உம்மை வெல்லமுடியாது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

குடும்பக் குழப்பங்கள் இன்னமும் தொடர்ந்து நிலைக்கும். முதல் மூன்று நாட்களிலும் உமக்கு மனச் சமாதான மிருக்கமாட்டாது. தனலாபம் நிச்சயம் ஆனல் செலவதிகரிக்கும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் சமூக சித்தியும் புகழும் நிச்சயம். தனலாபங்களுக்கு மிடமுண்டு. உம்முடைய பிதாவழி இனத்தவர் உமக்குச் சில தொந்தரவுகளை நடுவாரத்திற் செய்யக்கூடும். புதனும வியாழனும கவனமாய்க் கழிக்கவேண்டும்

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. நண்பரிலும் பார்க்க அன்னியர் அதிக உதவியாயிருப்பர். சுகவீனங்களுக்கிடமுண்டு. வாரத்தின் கடைசி இருநாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் குடும்பக் கவலைகளுக்கிடமுண்டு தேகசுகம் தொடர்ந்து நல்லாயிராது. புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும. கூடிய பொறுப்புக்களை நீர் ஏற்கவேண்டிவரக்கூடும். வாரத்தின கடைசிநாள் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் மனச் சமாதானமிராது. உம்முடைய காரியங்களில் பெண்மணிகள் அதிக உதவியாயிருப்பர். காணிகள்மூலம் இலாபங்களுக்குமிடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.**

இந்தவாரம் இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உமக்கு அதிக உதவிசெய்வர். இரகசியப் பகைவரால் இன்னல்களுக் கிடமுண்டு. நீர் சண்டை தொடுக்க முந்துவீர். ஆனல் ஆபத்தான விளைவுகள் உண்டாகமாட்டா.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

இந்தவாரம் உம்முடைய முயற்சிகளில் நீர் சித்திபெய்தக்கூடியதாயிருக்கும். விவசாயப் பொருட்கள் மூலம் இலாபங்களுக்கிடமுண்டு. கந்தோரில சில முரண்பாடுகளுக்கிடமுண்டு. ஆனல் அது ஒரு சிறு பரபரப்பாய் முடியும்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். மிக இலகுவாக நீர் காரியங்களை ஒழுங்கு பண்ணக்கூடியதாயிருக்கும். போட்டியிடுவோரை வெல்லுதற்கு மிடமுண்டு. விவசாயத்தில் இட்ட முதல் நல்ல இலாபத்தைத் தரும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய இனத்தவர்களுடனும நண்பர்களுடனும் சண்டைதொடுக்க முந்துவீர். குடும்பச் சூழலில் சுகவீனத்துக்கு மிடமுண்டு. வாரஇறுதியில் பிதாவழி இனத்தவர் உமக்குக் கொஞ்சம் கோபம் மூட்டுவர்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

ஒரு நல்ல வாரம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். பிள்ளைகள்மூலம் இன்பத்துக்கும் தனலாபத்துக்கு மிடமுண்டு. வாரஇறுதி சாத்திராத சில நல்ல புதினங்களைக் கொண்டுவரும்.

# இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச்சான்றோர்

3-ம் பக்கத்தொடர்ச்சி

இவரியற்றியபிரபந்தங்கள் பல. அவற்றுட் பிரதானமானவை இவரதுவழிபாடுகளாகிய கந்தவனத்திற் கோயில்கொண்டருளிய அறுமுகப்பரம்பொருள்மீதுபாடிய கந்தவன நாதர் பதிகம் முதலியன, வல்லிபுரநாதர் பதிகம், செந்தில யமக வந்தாதி, திருவேரக வந்தாதி, எட்டி குடிப்பிரபந்தம், புலோலிப பசுபதீசுரர் நான்மணிமாலை முதலியனவாம். இப்புலவர் தமது 85-ம் வயசிற் கட்பார்வை குன்றிவிட, கந்தவனத் தெக்தை சன்னிதியிற் சென்று சிறந்ததோத்திரங்களை அப் பெருமான் மீது பாடித் துதித்து வழிபட்டு, அந்தப் பெருமானது திருவருளாற் பழையபடி கட்பார்வை பெற்றதை வடமராட்சிப் பகுதியில் வாழும் காலங்கண்ட முதியோர் பலரறிவர்.

இப் புலவர் சிகாமணி அரிய கவியியற்றுவதோடு மாத்திரம் அமையாது யாப்பருங்கலக்காரிகை, கந்தபுராணத்துள்ள வள்ளியம்மை திருமணப்படலம், மறைசை யந்தாதி முதலியவற்றிற்கு உரையும் இயற்றியுள்ளார். இப் புலவர் நீடித்தகாலம் தமிழ்த்தாய்க்கும், சைவசமயத்துக்குய கவித் தொண்டாற்றி இற்றைக்கு நாற்பது வருடங்கட்கு முன் தமது 95-ம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரை நிகர்த்த கவியரசர் இக் காலத்திலெவருமிலரெனலாம்.

## கௌரவப் பட்டங்கள்

வருங்காலத்தில் இலங்கையில் வழங்கப்பெறும் கௌரவப் பட்டங்கள் இலங்கை மயமாக்கப்படவேண்டும் என்னும் கருத்து கொஞ்சக்காலத்துக்கு முன் நாட்டில் உலாவியது. ஆனால் முன்புபோலப் பிரித்தானிய பட்டங்களே வருங்காலத்திலும் வழங்கப்படவேண்டுமென்று அரசாங்கக் கட்சியார் தீர்மானித்திருக்கின்றார்களென அறியவருகின்றது.

## விலைக்கிருக்கின்றன

ஒவ்வொன்றும் 4½ பரப்பு விசாலமுள்ள வீடுகட்டுதற்குச் சிறந்த இரண்டுக் காணிகள் யாழ்ப்பாணம் சென்றியோவான் கல்லூரிக்குக் கிட்ட இருக்கின்றன.

எஸ். இரத்தினசபாபதி,
42, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்துக்கு எழுதுக.

M. 201 28—1—55.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


## வண்ணார்பண்ணை வட கிழக்கு சன சமூக நிலையம்

மேற்படி நிலையத்தின் விசேஷ கூட்டம் 23-1-55 அன்று மாலை நடைபெற்றது. அவ்வமயம் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகவும் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

போஷகர்: திருவாளர் காதி. எம். எம். சுல்தான் நகரசபைத்தலைவர், யாழ்ப்பாணம், தலைவர்: திரு. இ. சிவகுருநாதர்; உபதலைவர் திரு. வே. இராசதுரை, திரு. த. சேனாதிராசா, காரியதரிசி: செல்வன். வே. துரைசா, துணைக்காரியதரிசி: செல்வன். சே. சிவராசா, தனாதிகாரி: திரு N. சின்னப்பா, உபதனாதிகாரி: செல்வன், க. ஆனந்தநடராசா, கணக்குப்பரிசோதகர்: திரு. அ சோமாஸ்கந்தர்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்:—

திருவாளர்கள்: எம். கார்த்திகேசு, எஸ். எஸ். நவரத்தினம், முகாந்திரம் இ. பொ. இராசையா, ஆர் சி. மன்மதராயன், ச. பொ. துரைராசா, ஆ. கனகரத்தினம், செல்வன். மு. யோகேந்திரன், செல்வன், த. தில்லைராசா, செல்வன் த. பாலச்சந்திரன், செல்வன் து. விக்னராசா. திரு எஸ். சின்னத்துரை, செல்வன் எஸ். காராளசிங்கம், செல்வன். எஸ் இராமலிங்கம்

## கும்பாபிஷேகம்

கீரிமலையில் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமிக்கும் கீரிமலை நகரசங்கத்தாரால் அமைக்கப்பெற்ற திருக்கோயிலில் தை 12௳ புதன்கிழமை தொடக்கம் அனுக்ஞை முதலிய கிரியைகள் நடைபெற்று தை மாதம் 15ந் திகதி வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறுமென அறியவருகின்றது.

## சைவப்பிரசங்கம்

நிகழும் தை மீ 5ம் திகதி (18-1-55) செவ்வாய்க்கிழமை காரைநகர் இந்துக்கல்லூரி நடராச மண்டபத்தில தாயுமான சுவாமிகளின் குருபூசை சிறப்பாக நடத்தப்பெற்றது. ஆரம்பத்தில் ஸ்ரீமான் ஆ. தியாகராசா அவர்கள் தலைமை வகித்து அறநிலையப் பரிபாலன சட்ட மறுப்புக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமையம் தலைவர் சைவ ஆலயங்கள் சைவசமயிகளாலேயே பரிபாலிக்கப்படவேண்டுமென்றும், அரசாங்கத்தார் ஆலய பரிபாலன விஷயங்களில் தலையிடுவதற்கு அருகதை யற்றவர்கள் என்றும் ஆகவே ஆலய பரிபாலன விஷயத்தில அரசாங்கம் தலையிடக்கூடாதென்றும் கூறி, அவ்விதமே ஒரு பிரேரணையையும் கொண்டுவந்துள்ளார்கள். காரியதரிசியாக இருந்த ஸ்ரீமான் இ. நாகலிங்கம் அவர்கள் அப்பிரேரணையை ஆதரித்துப் பேசி அனுவதித்துள்ளார்கள்; அதன்மேல் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களும், ஆசிரியர் வே. சுப்பிரமணியம் அவர்களும் ஆதரித்துப் பேசினார்கள். சபை ஏகமனதாகப் பிரேரணை நிறைவேறியது. அதன்மேல் மலாய்நாட்டு அன்பர் ஸ்ரீமான் மு. கு. சுப்பிரமணியம் அவர்களின் பேருதவியால் நடத்தப்பெற்ற குருபூசையில் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் தாயுமானசுவாமிகளின் திருச்சரிதத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த பிரசங்கஞ் செய்துள்ளார்கள்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட நூல்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| கந்தபுராணம்வசனம் | 5 | — |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் | 3 | 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் | 2 | — |
| பாரதம் ஆதிபருவம் உரை | 3 | 50 |
| சேது புராணம் | 3 | — |
| இராமாயணம் — | | |
| பாலகாண்டம்(குறிப்புரை) | 2 | 50 |
| கன்னூறகாண்டிகையுரை | 3 | 50 |
| ,, விருத்தியுரை | 3 | 50 |
| அருட்பா | 1 | 75 |
| சைவசமய நெறியுரை | 1 | 25 |
| பெரியபுராண வசனம் | 2 | 50 |
| பெரியபுராணம் செய்யுள் | 5 | — |
| நாவலர் சரித்திரம் | 1 | 25 |
| இலக்கணச் சுருக்கம் | 1 | — |
| சைவவினாவிடை (1) | — | 20 |
| சைவவினாவிடை (2) | — | 65 |
| முதலாம் பாலபாடம் | — | 20 |
| இரண்டாம் பாலபாடம் | — | 35 |
| மூன்றாம்பாலபாடம் | — | 65 |
| நான்காம் பாலபாடம் | 1 | 75 |
| சிவாலய தரிசன விதி | — | 20 |
| அபிராமியந்தாதி யுரை | — | 25 |
| திருக்குறள் உரை | 5 | — |
| திருக்கோவையார் உரை | 3 | — |
| கொலைமறுத்தலாதி | 1 | 50 |
| திருமுருகாற்றுப்படை | — | 25 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | 1 | 25 |
| அகத்தியர்தேவாரத்திரட்டு | — | 25 |
| நித்திய கருமவிதி | — | 15 |
| பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடறிரட்டு | — | 15 |
| கந்தரலங்காரம்,கந்தரனுபூதி | — | 15 |
| மதுரை அறுபத்துநாலு திருவிளையாடற்போற்றிக் கலிவெண்பா | — | 05 |
| விநாயக அகவல் | — | 10 |
| சரஸ்வதி யந்தாதி | — | 05 |
| தண்டிவிநாயகர் திருவருட்பா | — | 05 |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
சைவப்பிரகாசயந்திரசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## திருக்கோணமலைக்கு ஆகாயப் பிரயாணம்

கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்கு ஆகாய மார்க்கமாக 1-.-55 தொடக்கம் பிரயாணஞ் செய்வதற்கு ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றதாம். பிரயாணம் முற்றுப்பெற ஒன்றரை மணிநேரம் செல்லுமென்றும் விமானப் பணம் இருபத்தைந்து ரூபா என்றும் அறியவருகின்றது.

## கண்ணப்பநாயனார் குருபூசை

நாள்: ஜயஹூ உகஉ (3-2-55) வியாழக்கிழமை

இடம்: சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6½ — 7½ கடவுள்வாழ்த்து, கண்ணப்பநாயனார்பூசை தமிழ்மறையோதல்.

திரு. V. சுப்பையாவும் அவரது கோஷ்டியாரும்.

7½ — 8½ கண்ணப்பநாயனார் என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்.

திரு வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார சபைக்காரியஸ்தர்.
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்
26-1-55

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் உரும்பராய்

1 சின்னத்தம்பி சிவப்பிரகாசமும் பெண்
2 பஞ்சாட்சரமும்

வழக்காளிகள்

இல 10514

எதிராக

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு நாவாந்துறை றோட்

1 காதி முகமது முகிதீன் கைம்பெண் முகமது உம்முக்குல்தூம்
2 முகமது மீராசாகிப்ப முகமது சல்தான் அப்துல் காதரும் பெண்
3 சுலைகா உம்மாவும் மானிப்பாய் கதமலை
4 ஆறுமுகம் நாகராசா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10514 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1955 ம் ஆ பங்குனி மீ 10 உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை மேற்கிலுள்ள "பம்மை வெளியும் புளியடியும்" பரப்பு 2 7/8 பங்கும் இது D 49/?54 ல் பதியப்பட்டுள்ளது இதில் கிழக்குப் பக்கமாக பதியும் 1 7/16 பங்கும் வீடும் குசினியும், மாலும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு முகமது மீரா சாகிப்பு பெண் முகமது மீரா நாச்சியாவின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு சந்தியாபெண் திரேசம்மாவின் ஆதனம், மேற்கு இக்காணியின் மீதியாயுள்ள அரைவாசிப் பாகம். தெற்கு நாவாந்துறை றோட். இது D 188/128 ல் பதியப்பட்டிருக்கிறது.

S. Ratnasabapathy,
Commissioner of Sales
Jaffna.
25—1—55
M 216 28-1-55

நேயர்கள் நெஞ்சம்

# சைவ மக்களுக்கு உடன் உதவி?

ஐயா,

காலஞ் சென்ற சண்டிருப்பாய் முதலியார் செகராசசிங்கமவர்களால் தாபிக்கப்பட்டு பல வருடங்களாகச் செவ்வனே நடாத்தப்பட்டு வந்த சண்டிருப்பாய் சைவாங்கிலவித்தியாசாலை, இப்பொழுது 35,000 ரூபா வரையில் கடனுள் ஈடுபட்டிருப்பதாயும், அதைத் தீர்க்கமுடியாமல் அதன் முகாமைக்காரர் அதை விற்க எண்ணியிருக்கிறார்களென்றும், அவ்வூரிலுள்ள சைவ நன்மக்களாவது, சைவ சங்கங்களாவது அக்கடனைத் தீர்த்து அவ் வித்தியாசாலையைத் தம் பொறுப்பில் ஏற்று நடாத்த முன்வரவில்லை என்றும் இக்கிலைமையில் ஈடுபட அவர்கள் மறுத்துவிட்டார்களென்றும் அறிகின்றேன். அது அப்படியிருக்க அயலிலேயுள்ள அந்நிய மதக் குருமார் சிலரே அதை விலைக்கு வாங்கித் தமது மதாசாரப்படி நடாத்த முயற்சி செய்கிறார்களென்னும் துக்ககரமான செய்தியொன்று எங்கும் பரவியிருக்கின்றது. இஃது உண்மையாயின் சைவர்களுக்கென ஏற்பட்டிருக்கும் சைவபரிபாலன சபையாராவது இதில் தலையிட்டு ஆகவேண்டியன செய்து இவ்வித விபரீத காரியம் நிகழாமல் தடுக்க வேண்டியது மிக முக்கிய கடனாகும். பாடல் பெற்ற சிவஸ் தலமாகிய திருக்கேதீச்சரமே ஒரு காலம் இவ்வித நிலையில் வந்தது என்றும் அதைச் சைவர்களுக்காகக் காப்பாற்றியவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும், அவர்பின் வந்த சைவபரிபாலனசபை அங்கத்தவர்களுள் ஒருவரான ஸ்ரீ பசுபதிச் செட்டியார் அவர்களுமேயென அறிவோம்.

இச் சிறு தொகையாகிய 35,000 ரூபாவைச் சேர்த்து, சரித்திர சம்பந்தமான ஒரு சைவக் கிராமத்திலுள்ள இச் சைவ வித்தியாசாலையை அந்நிய மதத்தார் கையில் புகவிடாமல் தடுக்க முடியாதா? முடியாதென்றால் சைவச்சபைகளால் நாம் எய்தும் பயன் யாதோ? முடியாதென்று விடாது வேண்டியது செய்யவே வேண்டும். காலந் தாழ்த்துவீர்களாயின் காரியம் கைதவறிப் போகுமென்பது நிச்சயம்.

இங்ஙனம்
ஓர் சைவாபிமானி

திருநெல்வேலி,
21-1-55

# எப்படியிருக்கின்றது

## தமிழ் மாணவருக்கு அரசாங்க உதவி?

இலங்கைச் சர்வகலாசாலையில் இடம்பெறுதல், இடம்பெற்றாலும் பொருள் வசதியின்மை, பொருள் வசதியிருந்தாலும் உணவு இடைஞ்சல் முதலிய இடைஞ்சல்களை நீக்க இயலாமை, ஆகிய பல இன்னல்களுக்குத் தமிழ் மாணவராளாயிருக்கின்றனர். இக்காரணங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே தமிழ்மாணவரைச் சர்வகலாசாலைக்குட் புகுதவொட்டாது தடுத்து நிற்கின்றது. இங்கியாயத்தால் தமிழ் மாணவருட் பலர் தங்கள் மீட்சிக்கு இந்திய சர்வகலாசாலைகளையும் லண்டன் சர்வகலாசாலையையும் எதிர்பார்த்து வாழ்கின்றனர்.

இந்திய சர்வகலாசாலைகளுக்குச்செல்வோர் இன்று எல்லையில்லாத் துன்பம் அனுபவிப்பதாகப் பத்திரிகைகள் வாயிலாய் அறிகின்றோம். இந்திய அரசாங்கத்தின் உதவியால் அத் துன்பங்களை நீக்கிக்கொள்ளலாமென்பது மாணவரின் மனச்சமாதானம். இவை இப்படியிருக்க லண்டன் சர்வகலாசாலையை எதிர்பார்க்கும் மாணவர் நிலைமைதான் என்னுகின்றது? லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சை விபரங்களே சரியாய் அறிவதில் வருத்தமிருந்து வருகின்றது. அன்னவற்றையும் எவ்வாற்றானும் நீக்கிக்கொள்ளலாமென்று வைத்துக்கொண்டு லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகளுட் சிறந்தது ஒன்றுக்கு இலங்கை அரசாங்கம்செய்திருக்கும் ஒழுங்கு என்ன என்று ஆராயும்பொழுது துன்பமேதொடருகின்றது. அது பீ. ஏ. (ஒனேர்ஸ்) தமிழ்ப் பரீட்சையைப்பற்றியதாகும். என்ன ஒழுங்கு? ஒரு ஒழுங்குமே செய்யப்படவில்லை! அங் அந்தப் பரீட்சை எடுக்க முடியாது. ஆனால் இலங்கைச் சர்வகலாசாலையில எல்லா வசதிகளுமுள்ள சிங்கள மாணவர் பீ. ஏ. (ஒனேர்ஸ்) சிங்களப் பரீட்சை எடுப்பதற்கு லண்டன் சர்வகலாசாலையுடன் இலங்கை அரசாங்கம் ஒழுங்கு செய்திருக்கின்றதாம். ஏன் இவ்வித ஒழுங்கைத் தமிழ் மாணவருக்கும் செய்துகொடுக்கவில்லை? இதுதானா தமிழ் மாணவருக்கு எங்கள் அரசாங்கம் செய்யும் உதவி? இதைப்பற்றிக் கேட்பாரில்லையா?

இப்பரீட்சையைத் தமிழ் மாணவரும் எடுப்பதற்கு இனியாயினும் எங்கள் அரசாங்கம் வேண்டிய ஒழுங்குகளைச் செய்யத் தூண்டுதற்கு எங்கள் பிரதிநிதிகள் முயற்சிப்பார்களாக.

நடுநிலைக் கண்ணன்

வண்ணை,
24-1-55.

மாதோட்ட விளைபொருள்விருத்தி வியாபார ஐக்கிய சங்கம்
உயிலங்குளம்

## மனேஜர்பதவிக்கு விண்ணப்பம்

பின்வரும் நிபந்தனைகளுக்கமைய 10 2 55ன் முன் ஷெ சங்க மனேஜர் பதவிக்குப் பதிவுசெய்த தபால் மூலம் காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்,

விபரங்கள்:— (1) இலங்கைப் பிரசையாக இருக்கவேண்டும்
(2) 2000/= ரூபா ரொக்கப் பிணையம் 2000/= ரூபாய் ஆதனப் பிணையும் கட்டவேண்டும்.
(3) தமிழில் 8ம் வகுப்புக்குக் குறையாத கல்வித்தகைமை உடையவராக இருக்க வேண்டும்.

மனேஜரின் சம்பளம் சகல எலவன்ஸ்களும் சேர்ந்து (பஞ்சப்படி உட்பட) மாதம் ரூபா 150/= ஆற்றைம்பது.

V. Dominic Lambert
காரியதரிசி,
M 218 28—1—55.

## அரசாங்க மேற்சபைத் தலைவர்

அரசாங்க மேற்சபைத் (செனேற்) தலைவராக ஸ்ரீ சிறில் டீ. சொய்சா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றார்.

## திருக்கேதீசுவரத்தில் தை அமாவாசைத் தீர்த்தம்

தை அமாவாசை புண்ணிய தினமாகிய சென்ற ஞாயிற்றுக்கிழமை (23-1-55) மாந்தை கிஸ்வகுல ஐக்கிய தொழிற்சங்கத்தின் உபயமாக திருக்கேதீஸ்வர ஆலயத்தில், அதிகாலையில் விநாயகருக்கும் திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கும், கௌரிநாயகி அம்மையாருக்கும் விதிப்படி ஸ்நபனாபிஷேகம் செய்து, சந்தன அங்கிசாத்தி விசேஷ அலங்கார தீபாராதனைகளும் செய்யப்பெற்று, சுவாமி எழுந்தருளி பாலாவியில் தீர்த்தோற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின்னர் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து அங்கு சமுகமளித்த பல நூற்றுக் கணக்கான பக்தர்கட்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மடத்தில் அன்னதானமும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## திருமண அழைப்பு

### மகேந்திரன் — சோமாவதி

நல்லூர் முதலியார் C. கணபதிப்பிள்ளை அவர்களின் புத்திரன் வைத்திய கலாநிதி C. மகேந்திரன் அவர்களுக்கும் யாழ்ப்பாணம் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. C. C. சோமசேகரம் அவர்களின் புத்திரி ஸ்ரீமதி சோமாவதி அம்மாளுக்கும் வண்ணார்பண்ணை நாவலர் வீதி "சோமஸ்தனில்" 2—2—55 காலை 7-30 க்கும் 8-30 க்கு மிடையில் திருமணமும் மாலை 5 மணிக்கு வரவேற்பும் நிகழும்.

கொழும்பு லோங்டன் டெறேஸ் 8-ம் இலக்க இல்லத்தில் 12-2-55 மாலை 5 மணிக்கு வரவேற்பொன்று நிகழும். சுற்றமித்திரர் யாவரும் அன்பாய் அழைக்கப்படுகின்றனர்.

M 216 28.1

## செஞ்சீனவுக்கு சேர் ஜோன்

செஞ்சீன முதலமைச்சர் ஸ்ரீ சௌ என் லாய் சேர் ஜோன் கொத்தலாவலையை சீனவுக்கு வரும்படி அழைத்திருக்கிறாரென்றும் சேர் ஜோன் அந்த அழைப்பை ஏற்கக்கூடுமென்றும் கூறப்படுகின்றது.

## வாழ்க்கைவானில்..

2-ம் பக்கத்தொடர்ச்சி

றால் தமிழர்கள் யாவரும் பழங்காலப் பண்பாட்டில் நிற்க உளங்கொண்டு விட்டார்கள். சந்ததி சந்ததியாய் வந்த அகத்தச் சொந்த மதத்தையே அறிவு வளர்ச்சியினால் தழுவப்போகிறார்கள் என்பதல்லவா பொழிப்பு?

●

### சித்திரை ஆண்டும் சுதந்திரம் வருமா?

காலஞ் செல்லச் செல்ல சித்திரைத் திங்கள் விழாவும் அடுத்தபடி சிவன் இராத்திரி கந்தசட்டி விநாயகர் சட்டி முதலியனவும் தமிழக மரபுக்குரியவை என்ற உண்மை புலப்படாமற் போகுமா? இழந்த செல்வத்தை எடுக்கக்கூடிய வகையிலே தமிழகம் நெறிப்படுகின்றதல்லவா?

●

### அப்படியானுல் ......?

ஆசிரியர்களாக அமரவிரும்பும் இளைஞர்கள் என்னதமாற வேண்டும்........? என்று 'வளர்மதி'க்கு விளங்கவில்லை! ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் எல்லாம் இந்துமதத்துக்குரியதாகவே யிருக்கவேண்டும் அல்லவா? சந்தனப்பொட்டிட்டுச் சூரிய பொங்கல் வைத்து இந்து முறைப்படி தமிழர்கள் யாவரும் தொன்மையில் வாழ்ந்து வந்தால் ஆசிரியத் தொழில் என்னும் வலைவீசி எறிவாரும் நிலைதளர்ந்து நெறிபிறழ்ந்து கண்ணியிற் படுவோரும் இல்லாது நல்ல காலம் தோன்றுமன்றோ.............? தமிழே சைவம் — சைவமே தமிழ் என்றது உண்மையாய்விடுமன்றோ .... .... .... .... ?

## ஏனோ இக்கடன் நிலைக்கின்றது?

மத்திய அரசாங்கத்திலிருந்து யாழ்ப்பாணம் நகரசபைக்கு நாலு இலட்சம் ரூபா கடனாக நீண்டகாலம் நிற்கின்றதாம். இதைப் பற்றிப் புதிய நகரசபைத் தலைவர் ஸ்ரீ சுல்தான் வண்ணார்பண்ணை மக்கள் தமக்களித்த வரவேற்பிற்பேசும் போது கூறினார்.

## பாக்கிஸ்தான் தலைமைத் தேசாதிபதிக்கு பண்டித நேருவில் நம்பிக்கை

பாக்கிஸ்தான் தலைமைத் தேசாதிபதி ஸ்ரீ குலம் முகமது சென்ற செவ்வாய்க்கிழமை தெல்லி மாநகரத்தை யடைந்தபொழுது இந்திய சனாதிபதி கலாநிதி இராசேந்திர பிரசாத் அவர்களும் பண்டித நேரு அவர்களும் அவரை வரவேற்றனர். கால நிலையின் தன்மையைக் கருதாமலே பெருந் திரளான மக்கள் அவ் வரவேற்பில் ஆர்வத்துடன் பங்குபற்றினர். ஸ்ரீ முகமது அவர்கள் பண்டித நேருவில் தமக்குப் பெரும் நம்பிக்கையிருப்பதாகப் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினர்.

## போர்மோசாத் தொடர்பில் போர் முழக்கம்

போர்மோசாவை, சியாங்கே ஷேக்கைத் தலைவராகக் கொண்ட தேசிய சீனர்களிடமிருந்து மீட்டுவிடுவதாக மக்கள் சீனத் தலைவர் சௌ என் லாய் உற்சாகத்துடன் உறுதிமொழி கூறுகின்றார். தேசிய சீனர்கள் சார்பாக போர்மோசாவைக் காப்பாற்றுமாறு படை அனுப்புதற்கு அமெரிக்க தேசிய மாகாட்டாரிடம் அனுமதி கேட்டிருக்கின்றார் அமெரிக்க சனாதிபதி. அமெரிக்க தேசிய மகாநாடு அவர் கேட்டபடி அனுமதி கொடுத்து விட்டதாம்.

# ஈருடல் ஓர் உயிர் வாழ்வு

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

னருளன்றி அணுவும் அசையாது. இனி இந்த உடல்கள் ஆண் பெண் என்று வெளித்தோற்றத்தினால் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண் என்னும் சிவமும் பெண் என்னும் சத்தியும்கூடியே உலகம் பொலிந்து வருகிறது. அனுபவ சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம், தத்துவசாஸ்திரம் முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டும் உலகத்தில் இரு சக்திகள் ஒன்றுசேர்ந்தே யாவும் நடைபெறுகின்றதென்பது தேற்றம். அண்ட பிண்டங்கள் யாவும் பெண் ஆண் வடிவாயிருத்தல்போல அவைகட்குக் காரணமாக உள்ள முழுமுதற் பொருளும் பெண் ஆண் வடிவாயே இருப்பதென்பது அறிவுடையோரதுகொள்கை. ஆகவே பிறவிகளுக்கெல்லாம் மேலான மனிதப் பிறவியும் பெண்ணோடு ஆண் இரண்டற்று ஒன்றாய்க் கலந்தே உலகத்தை நடத்தி வருகிறார்கள். ஒரு குடும்பத்தை அந்தக் குடும்பத்துத் தலைவியும் தலைவனும் ஒன்றுசேர்ந்து—ஒரு மனப்பட்டு நடத்துகிறார்கள்.

"ஈதலறந் தீவினை விட்டீட்டல்
பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்
தாதரவு
பட்டதே யின்பம் ... ... ..."

என்ற மூதாட்டியின் வாக்காலுமுணர்க. ஒரு தலைவனுக்கு ஆண் உறுப்புள்ள உடலும் ஒரு தலைவிக்குப் பெண் உறுப்புள்ள உடலும் இருந்தாலும் இல்லறத்தை நல்லறமாக நடத்துவதற்கு இந்த இரு உடலும் ஒரு உடலாக எமது அம்மையுடலும் அப்பன் உடலும் ஒன்று சேர்ந்தது போல ஒன்றுபட முடியாவிடினும் இவர்கள் இருவரும் ஒருமனதாய்க் கூடியே இல்வாழ்வை நல்வாழ்வாய் நடத்துகிறார்கள். இதனைத்தான் சிறாகச் சிறப்பாக ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாக ஒன்றுபட்ட கணவன் மனைவியரைப் பார்த்து உலகோர் 'ஓர் உயிர் இருடல்" தம்பதிகள் என்று கூறுவது.

இத்தக்காலத்திலே மேலைநாடுகளில் மாத்திரமல்ல கீழ்நாடுகளிலும் தம்பதிகளுக்குள்ளே இந்த "ஓர் உயிர் ஈருடல் எனத்தகும் தம்பதிகளதொகை குன்றி வருகின்றது சத்தியும் சிவமும் பிரிவின்றி ஒன்றோடொன்று இயைந்து நிற்கிறதென்பதே எங்கள் சித்தாந்தம்.

சைவ உலகில் மனைவியும் கணவனும் சக்தியும் சிவமும்போலப் பிரிவின்றி ஒன்றுபட்டு நிற்கவேண்டியதே முறை. இதுவே நெறி பிறழாத வாழ்க்கை. இதுவே ஒழுக்கமான வாழ்வு. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்த நிலையிலும் இந்த ஒற்றுமை உடன்பாடாயிருத்தல் அவசியம்.

பெண்ணுக்கு ஞானத்தை
வைத்தான்—புவி
பேணிவளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் —
நல்ல
மாதரறிவைக்கெடுத்தார்
கண்களிரண்டினி லொன்றை —
குத்திக்
காட்சிகெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால்
— வையம்
பேதமையற்றிடுங்காணீர்
— (பாரதி)

என்றதால் நாம் பெண்கள் அறிவைக் கோரிய முறையில் வளர்த்தால் எங்கள் தம்பதிகளுக்குப் பிணக்குகள் ஏற்படாதென்பதற்கையப்பாடில்லை.

பெண் என்பதே அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, தொண்டு, அன்பு, அருள் முதலிய சர்வ குணங்களும் பொருந்தியதொன்று. நாம் இந்த நாளில் எங்கள் பெண்களுக்கூட்டிவருங் கல்வியோ பெண்களுக்கு இயல்பாகவுள்ள சர்வ நற்குணங்களையும் அழிக்குங் கல்வி, நல்ல மாதரறிவைக் கெடுக்குங் கல்வி. ஆகவே பெண்கள் இல்லுக்கரசிகளாக இருந்து "இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை"யாம் என்னும் இல்வாழ்வாரோடு "ஓர் உயிரும ஈருடலும்" போல இரண்டறு ஒன்றுக் காட்சி அளிக்கவேண்டில் சுயமொழி நூல்களை — சைவநூல்களை — ஐயந்திரிபறக் கற்றல் வேண்டும் — சமய ஞானம் வளர வேண்டும்.

எங்கள் பெண்கள் அன்னிய பாடசாலைகளில் விபரீதக்கல்வியைக் கற்று அல்லோலகல்லோலப் படாமல் தடுப்பதற்காகச் சைவப் பெரியோர் சுயமதம் மொழி நாடென்னும் உணர்ச்சி ததும்பக்கூடிய கல்வியை எமது பெண்களுக்கூட்ட முனைந்து வருகிறார்கள் எங்கள் சைவப்பெரியார்களும் தனவந்தர்களும் அறிஞர்களும் தொண்டர்களும் தியாகிகளும் ஒருமித்து எங்கள் புதல்விகளுக்குச் சைவத்தையும் தமிழையும் குடும்பத்தையும் நாட்டை பல தொண்டையும் தழுவி நடக்கக்கூடிய கல்வியைப் புகட்டுவார்களாக. எமது சைவத்தமிழ் உலகெங்கும் "ஓர் உயிர் ஈருடல் தம்பதிகள் நிறைந்து காட்சி அளிக்கப் பரம்பொருள் கிருபை புரிவதாக!

---

இந்து ஆலயச் சட்டம்

இந்து ஆலய அறநிலையச் சட்ட திட்டத்தைப் பாராளுமன்றத்தில் உள்நாட்டு மந்திரி சமர்ப்பித்துவிட்டார்.

---

## திருமுருகாற்றுப்படை

1-ம் பக்கத்தொடர்ச்சி

'தெய்வஞ் சான்ற திறல்விளங்
குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந்
தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப்
பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங்
காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின்
வரவென
வன்புடை நன்மொழி யளைஇ...
... ... ... ... ... ... ... விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி......"

என்ற இடத்திலேதான் பாட்டின் உயிர்கருபிராய நிலை உளளது என்று கூறலாம் இவ்விடத்திலேதான் புலவருடைய முருகன் அனுபவம் தேறலின் தெளிவாகப் புலப்படுகின்றது. எதிர்ப்பட்டவன் தனக்குக் கிட்டக்கூடிய காட்சியின் செம்மையை ஒருமின்வெட்டு நேரத்திலே உணர்வதும இவ்விடத்திலேதான் புலவரும எதிர்ப்பட்டவனும் முருகன் காட்சி என்ற பேரனுபவத்தில் ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற ஒப்பற்ற இடம் இது என்று கூறலாம்.

நல்குமதி இழுமென இழிதரு மருவிப் பழமுதிர் சோலை மலை கிழவோனே என்று பாட்டு முடிவடைகிறது. நல்குமதி என்ற வினைக்கு பழமுதிர் சோலை மலைகிழவோனை வினை முதலாக அமைத்ததனால் முருகன் பல இடங்களில உறைந்தாலும ஒருவனே என்ற உண்மையைப் புலவர் நுண்ணிதான முறையிலே உணர்த்திநிற்கின்றனர் பாட்டின ஒருமைப்பாடும இதுக்கழும சிறக்கின்றன.

X X X

இக் கட்டுரைத் தொடரில் பாட்டைப் பகுதிபகுதியாகப் பிரித்து விளக்கம கூறியுள்ளேன். உண்மையிலே பாட்டை ஒரேமுறையாகப் படிப்பதுதான் நல்லது. அப்பொழுதான் பாட்டின் அமைப்பின சிறப்பையும ஆற்றலையும உணரமுடியும். இன்னுமொன்று: பாட்டை வாய்விட்டு ஏற்ற ஓசையை உணர்ந்து படிக்கவேண்டும. அப்பொழுதான் பாட்டின் ஓசையொழுகிலே வருகின்ற தெளிவு சுழிவுகளை அனுபவிக்க முடியும. பெருமபான்மையாக எதிர்ப்பட்டவனிலே வைத்துத்தான் பாட்டிற்கு விளக்க மெழுதியுள்ளேன். உண்மையிலே, பாட்டு காலமும் இடமும கடந்து எல்லா உயிர்களையும முருகனிடம வழிப்படுத்தும ஆற்றல் வாய்ந்து நிற்கிறது; பழமுதிர் சோலை அருவியின் வேகத்தை உடையது.

முற்றும்.

---





# சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செறிவு, கைகால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப்பொருமல் புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, வெள்ளை, சூலை, சந்துவாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி வஜ்ரம் பலம் முதலானவை உண்டாகும்

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக் கட்டு, பிரசவத்தால் உண்டாகும பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்ச் சாணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒரு இருத்தல் விலை ரூபாய் 25-00
அரை ,, ,, 12.-50
கால் ,, ,, 6-25.

வி. பி. பி. செலவு பிரத்தியேகம். வி. பி. பி. மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

விலாசம்:

K. ஆறுமுகம்பிள்ளை
இலக்கம்: 3/1 தட்டாதெரு,
கோட்டை முனை,
மட்டக்களப்பு.

[M 153 28-10]


# கூட்டுவழிபாட்டுதொடக்கவிழா

நாவலப்பிட்டியைச்சேர்ந்த பூவால்கந்தைத் தோட்டத்திலுள்ள முத்துமாரியம்மன் ஆலயத்தில் 15-1 55 சனிக்கிழமை பிற்பகல் ஸ்ரீ ஓ. எல். எம். லெப்பை அவர்கள் தலைமையில் கூட்டு வழிபாடு ஆரம்பமாயது. அத்தருணம் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் கூட்டு வழிபாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் நாங்கள் எல்லாரும இன்று நலமேநினைத்து, நலமே பேசி, நலமே செய்யும் காரியம் ஒன்றிற்காகக் கூடியிருக்கிறோம் என்றும், ஒவ்வொருவரும் நாம ஏன் இப்பூவுலகத்திற்கு வந்தோம? இவ்வுலகை விட்டுப்போகும்போது என்ன கொண்டு செல்லப் போகிறோம்? என்ற கேள்விகளைக் கேட்டுப்பார்க்கவேண்டுமென்றும், ஒவ்வொருவரும் அறிந்தோ அறியாமலோ மனத்தால், வாக்கால், காயத்தால் பாவங்கள் செய்கிறார்கள் என்றும், அப் பாவங்கள் தீர்வதற்காகவே ஆலயங்கள் ஏற்பட்டன என்றும், ஆலயத்திற்குச் சென்று உடம்பால் வழிபாடு செய்யுமபோது உடம்பு செய்த பாவம் நீங்குகின்றது; ஆண்டவன்புகழைப் பாடும்போதும ஆண்டவன் நாமத்தை உச்சரிகரும்போதும் வாக்கால் செய்த பாவம் நீங்குகின்றது. ஆண்டவனைத் தியானிக்கும்போது மனத்தால் செய்த பாவம் நீங்குகிறது என்றும். கலியுகத்தில் ஆண்டவன் திருவருளைப் பெறுவதற்கு இலகுவான மார்க்கம் கூட்டு வழிபாடே என்றும், ஆண்டவன் நாமத்தை ஓதுதற்குக் கல்வியறிவுதேவையில்லையென்றும் குறிப்பிட்டு ஒவ்வொரு வெள்ளியும் எல்லோரும் கூடிக் கூட்டு வழிபாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. Jaffna on Friday January 28, 1955.